# வில்லவன் படைப்புகளில் அரசியல்

# Politics in Villavan's Works

**தே. வேதராஜ்**
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை
(பதிவு எண். 17221174021021)
சாராள் தக்கர் கல்லூரி, திருநெல்வேலி
(மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக அங்கீகாரம் பெற்றது)

**T. Vetharaj**
*Ph.D. Scholar, Tamil Department*
*(Reg. no. 17221174021021)*
*Sarah Tucker College, Tirunelveli*
*(Recognized to Manonmaniam Sundaranar University)*

**முனைவர் யோ. பிரீடா கன்ஷீலா**
உதவிப்பேராசிரியர், தமிழ் ஆய்வு மையம்
சாராள் தக்கர் கல்லூரி, திருநெல்வேலி
(மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக அங்கீகாரம் பெற்றது)

**Dr. Y. Freeda Consheela**
*Assistant Professor, Tamil Research Centre*
*Sarah Tucker College, Tirunelveli*
*(Recognized to Manonmaniam Sundaranar University)*

## ஆய்வுச் சுருக்கம்

*இலக்கியம்சமூகத்தின் பிரதிபலிப்பே ஆகும். சமூகத்தின் ஒவ்வொரு நிகழ்வுகழும், அசைவும் படைப்பாக வெளிப்படுகின்றன. தான் வாழும் சமூகத்தின் மேல் அக்கறையுடைய ஒவ்வொரு எழுத்தாளனும் சமூகத்தைத்தான் எழுதுவான். கவிஞர் வில்லவனின் எழுத்துகள் அவரின் சமூக அக்கறையினைக் காட்டுகின்றன. மக்களும் அரசியலும் ஒன்றை ஒன்று பிரிக்க இயலாதவை. சிறந்த சமூக அமைப்பிற்கு சிறந்த அரசியல் அமைப்புதேவை. இன்றைய அரசியல்வாதிகளின் சுரண்டல், ஊழல், போலித்தனம், ஆடம்பரச் செலவு, போதைப்பழக்கம் போன்றவற்றால் சமூகத்தில் பல்வேறு சீரழிவுகள் நடக்கின்றன. இந்தச் சமூக அவலங்களையும் அவற்றிற்கான தீர்வுகளையும் வில்லவன் தனது படைப்புகளில் பதிவு செய்துள்ளார்.*

***முக்கியச்சொற்கள்:*** *அரசியல், சுரண்டல், ஊழல், போலித்தனம், ஆடம்பரச் செலவு, போதைப்பழக்கம்*

## Abstract

*Literature is a reflection of society. Every event and movement of society manifests itself as creation. Every writer who cares about the society in which he lives will write about society. The writings of the poet Villavan show his social concern. People and politics are inseparable from each other. A better social order requires a better political system. The exploitation, corruption, hypocrisy, luxury spending and drug abuse of today's politicians are taking place in the society. Villavan has recorded these social ills and their solutions in his works.*

***Keywords:*** *Politics, Exploitation, Corruption, Hypocrisy, Luxury Spending, Drug Addiction*

**Citation**

Vetharaj, T. and Y. Freeda Consheela. "Politics in Villavan's Works." *Journal of Tamil Culture and Literature*, vol. 2, no. 4, 2023, pp. 22–28.

**முன்னுரை**

*அரசியல் என்ற வார்த்தைக்குப் பல்வேறு அர்த்தங்கள் கூறப்பட்டாலும் இந்த வார்த்தை ஆளும் வர்க்கத்தினரின் ஆட்சி, அதிகாரம், ஆளுகை என்பவற்றைக் குறிக்கவே அதிகம் பயன்படுத்தப்படுகிறது. மனித வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் அரசியலின் தாக்கம் உள்ளது. வாழ்வு நிலைகள் அரசியலைச் சுற்றியே பயணிக்கின்றன. தனி மனித, சமூக வாழ்வு ஆட்சியாளர்களின் நிலையைப் பொறுத்துத்தான் அமைகிறது. நல்ல ஆட்சியாளர்கள் மக்களுக்கு நல்ல வாழ்க்கையை அளிக்கிறார்கள். ஆட்சியாளர்கள் இடறும் போது நாடும் நிலை தடுமாறுகிறது. ஆட்சியாளர்கள் தடம் புரளுவதால் சமூகத்தில் நிகழும் கேடுகளை வில்லவன் தனது படைப்புகளில் விளக்குகிறார். இவை குறித்து இக்கட்டுரைஅமைகிறது.*

**ஆசிரியர் அறிமுகம்**

*கவிஞர் வில்லவன் இந்தியாவின் தென்கோடி மாவட்டமான குமரியின் மைந்தர். ''கீழ்குளம்'' என்னும் சிற்றூரில் பிறந்தவர். இவரது தந்தை வே. சின்னையன். தாயார் சோ. கமலம் கண்ணம்மாள். இந்தத் தம்பதிக்கு மூன்று ஆண்கள் மூன்று பெண்கள் என ஆறு குழந்தைகள். வில்லவன் ஆறாவது குழந்தை. இச்சூழலில் இளம் வயதிலேயே தந்தையை இழந்தார். வறுமையான நிலையில் தாயாரின் கடின உழைப்பால் குடும்பம் வாழ்ந்தது. குடும்பச் சூழல் இவருக்கு வாழ்வுக்குரிய பள்ளிக்கூடமாய் மாறியது. இவரது கடின உழைப்பு இவரைக் கல்லூரிப் பேராசிரியராக உயர்த்தியது.விளையும் பயிர் முளையில் தெரியும் என்பது பழமொழி. ஆசிரியரும் இளமையிலேயே எழுத்துலகில் கால் பதிக்கத் தொடங்கியவர். கவிதை, நாடகம், கட்டுரை எனப் பல வடிவ எழுத்துகளிலும் வல்லவர்.எழுத்துப்பணியோடு சமூகப் பணியினையும் இணைத்து செய்து வருபவர். இவரது எழுத்துகளில் சமூக உணர்வு மேலோங்கி இருக்கும். அதன் ஒரு பகுதியே அவரது அரசியல் சிந்தனைகள்.*

**அரசியல் - அறிஞர்களின் விளக்கம்**

*அரசியல் என்பதற்கு அறிஞர்கள் பலரும் பல்வேறு விளக்கங்களைக் கூறுகின்றனர். உலக அளவில் அரசியல் என்ற வார்த்தை பல்வேறு மநிலங்களுக்கு இடையே உள்ள உறவைக் குறிக்கிறது. பொதுவாக முடிவுகளை எடுக்கும் செயல் முறையை அரசியல் என்பர். அதாவது அரசியல் என்பது தனி நபருக்காக அல்லாது பொதுநலனுக்காகச் செய்யப்படும் பொது செயல்களை உள்ளடக்கியதாக இருக்கும்.*

*ஆங்கிலத்தில் அரசியல் என்பதைக் குறிக்கும் ''Politics' எனும் சொல் 'Pilitikos' என்ற கிரேக்கச் சொல்லிலிருந்து தோன்றியதாகும். 'Police' என்பதற்கு நகர அரசு என்பது பொருள். கிரேக்கர்கள் அரசியல் என்பது, ''நகர அரசு தொடர்பானவற்றை ஆராயும் ஒரு கலை'' என்றனர்.*

*அரசியல் என்பதற்கு எளிதில் புரியும் படி கூறுவதானால், ஒரு நாட்டை, ஒரு மாநிலத்தை, ஒரு மாவட்டத்தை அல்லது ஒரு அமைப்பு ரீதியான ஒன்றை ஆட்சி செய்வதாகும். ஒரு தலைவர், செயலர், பொறுப்பாளர்கள், அதனால் பயன் பெறுவோர் என அனைவரின் செயல்பாடும் இதற்கு அவசியமாகும். ஆட்சி அல்லது ஆளுகை குறித்த அறிவியலை அரசியல் என்கிறோம். மக்கள் குழுக்களின் முடிவெடுக்கும் முறைதான் அரசியல்.*

*இந்த அரசியலில் தொடர்புடைய அனைவரையும் குறிப்பாக ஆட்சியுடன் தொடர்புடையவர்களை அரசியல்வாதிகள் என்கிறோம். அரசியல்வாதிகள் என்போர் எப்போதும் நாட்டின் நலனும், குடிமக்களின் நலனும் விரும்புகின்றவர்களாக இருக்க வேண்டும். உண்மை, தன்னலமற்ற தொண்டுள்ளம், பிறர்நலம் பேணல், தீமையை எதிர்க்கும் துணிச்சல், ஒருபோதும் அநீதிக்குத் துணை போகாமை, குடிமக்களின் தேவை அறிந்து அதற்கேற்ப திட்டங்கள் வகுத்துச் செயல்படுத்துதல் போன்ற குணநலன்கள் உள்ளவர்களாக இருக்க வேண்டும்.*

***நெல்லும் உயிரன்றே; நீரும் உயிரன்றே;***
***மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்;***
***அதனால், யானுயிர் என்பது அறிகை***
***வேல்மிகு தானை வேந்தர்க்குக் கடனே.'***

*இவ்வுலகிற்கு மன்னனின் முறையான ஆட்சியே உயிர் என்பதை உணர்த்தும் மோசி கீரனார் பாடல் இது.*

***வரப்புயர நீருயரும்.......***
***கோலுயரக் கோன்உயர்வான்.***
*எனும் ஔவையார் பாடலும் இங்கு நினைக்கத்தக்கது.*

*நாட்டின் வளர்ச்சிக்கு திறமையான ஆட்சியாளர்கள் தான் காரணம். ஒரு நாட்டின் வீழ்ச்சிக்கும் அவர்களே காரணமாகின்றனர். நல்ல ஆட்சியாளர்கள் எல்லாக் காலங்களிலும் இருந்துள்ளனர்; இருக்கின்றனர். ஆனால் செழித்து வளரும் பயிரை அதைவிடச் செழித்து வளர்ந்து அழிக்கும் களை போல சில அரசியல்வாதிகள் உள்ளனர். இத்தகையவர்களிடம் போலித் தனமே அதிகம் காணப்படுகிறது. இவர்கள் தாங்கள் ஆட்சிக்கு வரவேண்டும் என்பதற்காக வெற்று வாக்குறுதிகள் அளித்தல், அரசின் திட்டங்களினைத் தவறாகப் பயன்படுத்துதல், ஊழலுக்குத் துணைபோதல், ஆடம்பரச் செலவுகள் செய்தல், சாதி, மதம், இனத்தின் பெயரால் அரசியல் நடத்துதல், போதைப் பழக்கங்களுக்கு தான் அடிமையாவதுடன் மற்றவர்களையும் ஊக்குவித்தல் போன்ற பல்வேறு நகைப்பிற்கிடமான, அநீதியான செயல்களைச் செய்கின்றனர். இத்தகைய அரசியல்வாதிகளை ஆசிரியர் தனது படைப்புளில் தோலுரித்துக் காட்டுகிறார்.*

**சுரண்டல்**

*மக்களுக்கான திட்டங்கள் மக்களிடம் சரியாகச் சென்று சேர அரசியல்வாதிகள் ஒத்துழைக்க வேண்டும். ஆனால் இங்கு சுரண்டலின் முழு வடிவமாக அவர்கள் திகழ்கின்றனர். வலியவர்களை விட்டுவிட்டு எளியவர்களிடம் சுரண்டல் நிகழ்த்தப்படுகிறது என்பதை,*

1. *விழித்துப் பார்த்தேன்*
2. *விரலை மெதுவாய்க்*
3. *கடித்தொரு பாச்சை*
4. *கால்வாங் கியது.*
5. *பதைத்துக் கேட்டேன்:*
6. *பாவப் பூச்சியே!*
7. *கட்டை விரல் ஏன்*

8. தட்டுப் படாமல்
9. போனதுன் கண்ணில்?[2]

எனச் சுரண்டலாமா? எனும் கவிதையில் பாச்சை கூட கட்டை விரலை விட்டு விட்டு சுண்டுவிரலைச் சுரண்டுகிறது எனக் காட்சிப்படுத்தி, இந்தச் சமூக அவலமான சுரண்டலை நகைப்பிற்குள்ளாக்குகிறார்.

***ஊருணிகளை இறைத்து***
***தங்கள்***
***நீச்சல் குளங்களை***
***நிரப்பிக் கொள்ளும்***
***அரசியல்கள்![3]***

எனச் சுரண்டல் நடக்கின்றதைச் சூரியக் கனவுகள் எனும் கவிதையில் விளக்குகிறார் ஆசிரியர்.

***பாரதத் தாயின்***
***சேலையை உரிந்து***
***எங்கள் அரசியல்வாதிகள்***
***குளிருக்குப் போர்த்துகிறார்கள்![4]***

எனும் வரிகள் சுரண்டலின் உச்சகட்ட வேதனையைக் காட்சிப்படுத்துகின்றன. தேசமே ஆடையற்றிருந்தாலும் கவலைப்படாமல் மக்களைச் சுரண்டி தாங்கள் சுகபோகமாய் வாழும் அரசியல்வாதிகள் நிறைந்த தேசம் நமது தேசம் எனக் கவலைப்படுகிறார் ஆசிரியர்.

**ஊழல்**

இன்று அரசியல்வாதிகள் என்றாலே ஊழல்வாதிகள் என்று கூறும் அளவுக்கு ஊழல் மலிந்துவிட்டது. எதிலும் வெளிப்படைத் தன்மை இல்லை. அரசின் திட்டங்களைச் செயல்படுத்துவது, பணிநியமனங்கள், இடமாற்றம் என அனைத்துமே இன்று விலைபேசப்பட்டுவிட்டன. தூய்மையான துறை எனக் கருதப்பட்ட கல்வித்துறை கூட இன்று கேலிக்குரியதாகிவிட்டது. இவற்றை எல்லாம் தட்டிக்கேட்க இயலாத போது சமூக அக்கறை கொண்டோர் தங்கள் படைப்புகளில் பதிவு செய்கின்றனர். மேத்தா "தேசப்பிதாவுக்கு ஒரு தெருப்பாடகனின் அஞ்சலி" எனும் கவிதையில் இன்றைய ஆட்சியாளர்களின் கையில் சிக்கி தேசம் அலங்கோலப்படுவதைக் கண்டு கண்ணீர் வடிக்கிறார்.

***அமுத சுரபியைத்தான்***
***நீ தந்து சென்றாய்***
***இப்போது***
***எங்கள் கைகளில் இருப்பதோ***
***பிச்சைப் பாத்திரம்!***

என்பது மேத்தாவின் வரிகள். வில்லவனும் ஊழல் அரசியல்வாதிகள் குறித்து நிறையவே எழுதியுள்ளார்.

***ஆகஸ்டில்***
***ஒரு சூரியன் உதித்ததாய்***

***அறிவிப்பு வந்தது***
***சூரியக் கதிர்கள்***
***பூமியில் விழாமல்***
***ஊழல் மேகங்கள்***
***மறைத்து விட்டன[5] (சூ.க.24)***

*எனும் கவிதையில் சுதந்திரம் வந்த பின்பும் தேசத்தில் வெளிச்சத்தைக் காண முடியவில்லை என்கிறார் ஆசிரியர். சூரியன் உதித்தால் இருள் அகலும். வெளிச்சம் உதிக்கும். இரவில் உறங்கிக் கொண்டிருந்த உயிர்கள் அனைத்தும் மனிதன் உட்பட கண்விழித்து சுறுசுறுப்பாய்க் கடனைச் செய்யும். பறவைகளும், விலங்குகளும் சூரியக் கதிர்களின் கதகதப்பிலும் ஒளியிலும் மகிழ்ச்சி ஆரவாரம் செய்யும். இங்கே எல்லாம் மாறாக நிகழ்கிறது. அடிமை இருட்டில் இருந்த தேசத்தின் மீது சுதந்திரச் சூரியன் உதித்தபின்னும் அதன் ஒளி பூமியில் விழாமல் ஊழல் மேகங்கள் மறைப்பதாய்க் கூறும் ஆசிரியரின் நிலைப்பாடு மிகவும் யதர்த்தமானது.*

**போலித்தனம்**

*“உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும்” என்பது வள்ளலார் வாக்கு. இந்த உலகில் உறவுகள் பலவும் போலித்தனமாய் உள்ளன. அந்த உறவுகள் கொள்ளத் தகாதவை என்பதை இவ்வரிகள் உணர்த்துகின்றன. போலித்தனம் என்பது இன்று எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்திருப்பதைக் காணமுடிகிறது. அரசியல் இதில் முன்னணியில் இருக்கிறது என்பது ஒன்றும் பொய்யல்ல.*

***அரசியல்வாதிகள் தங்கள் வாகனங்களில்***
***“சோசலிசம்” என்று***
***போர்டு போட்டிருக்கிறார்கள்!***

***நாமும் ஓட்டுக் கட்டணங்களைக் கொடுத்து***
***உட்கார்ந்து பார்க்கிறோம்***
***“ஹாரன்” ஒலிக்கிறதே தவிர***
***வாகனம் புறப்படுவதாகத் தெரியவில்லை[6]***

*எனும் கவிதை அரசியல்வாதிகளின் போலித்தனத்தைக் காட்டுகிறது. பாவம் மக்கள் அவர்களது “போர்டு”களைப் பார்த்து ஏமாந்து போகிறார்கள். அரசியல்வாதிகளின் பெயர்ப்பலகைகள் போலியானவை என்பதைப் புரிந்து கொள்ளாமல் ஓட்டுக் கட்டணங்களை அப்பாவி மக்கள் தாராளமாய்க் கொடுக்கிறார்கள். “உட்கார்ந்து பார்க்கிறோம்” எனும் வரியில் மக்களின் ஏக்கம், ஏமாற்றம், விரக்தி, எதிர்பார்ப்பு, ஆசைகள் எல்லாமே அடங்கியிருக்கின்றன. இதனை அரசியல்வாதிகள் உணர்வதும், புரிந்து கொள்வதும், செயல்படுவதும்தான் எப்போதோ தெரியவில்லை.*

*“எது சிலுவை ?” எனும் சிந்தனை நாடகத்தில் மனதில் சுமக்க வேண்டிய சிலுவையைக் கிறிஸ்தவர்கள் உடலில் சுமந்து திரிவதைக் கேலி செய்யும் ஆசிரியர் கூடவே அரசியல்வாதிகளின் போலித்தனத்தையும் கோடிட்டுக் காட்டுகிறார்.*

**ஆடம்பரச் செலவு**

*“சிக்கனம் வீட்டைக் காக்கும்: சேமிப்பு நாட்டைக் காக்கும்” என்பது அனைவரும் அடிக்கடி உச்சரிக்கும் ஒருவரி வாசகம். நாட்டை ஆளும் ஆட்சியாளர்கள் வெற்று ஆரவாரங்களையும்*

*சுய பிரகடனத்திற்காக ஆடம்பரமான செயல்களையும் செய்து மக்களின் வரிப்பணத்தை வீணடிப்பது உண்டு. இது இறுதியில் நாட்டின் பொருளாதார நிலையைச் சீரழித்து விடும். இந்தக் கருத்தினை ஆசிரியர் ''மலர்கள் அழுகின்றன'' எனும் கவிதையின் கருவாக்குகிறார்.*

***மலர்ந்த இடத்தில் நின்று***
***மணம் வீசவே விரும்புகிறோம்***
***.....................***
***அரசியல் வீதிகளில்***
***நாங்கள் நசுக்கப்படும் போது***
***அழகியல் மட்டுமா அழிகிறது***
***தேசத்தின் பொருளியலும் அல்லவா***
***புதைகிறது.[7]***

*அரசியல் விழாக்களில் ஏராளமான மலர்கள் மட்டுமல்ல இதுபோன்ற அலங்காரப் பொருட்களும் வீண்டிக்கப்படுவதுண்டு. ஒரு மணி நேரம் அல்லது சில வினாடிகளுக்காகக் கூடப் பல்லாயிரக்கணக்கான மலர்கள் தரையில் போட்டு மிதிக்கப்படுவதுண்டு. இங்கு அம்மலர்களின் குரலாகக் கவிதை படைக்கப்பட்டாலும் அதில் ஒலிப்பது முழுக்க முழுக்க ஆசிரியரின் குரல்தான்.*

**போதைப்பழக்கம்**

*அரசியலுக்கு வருபவர்களில் பெரும்பாலானவர்கள் போதைக்கு அடிமையாய் இருப்பதும், அவர்களே இது போன்ற இழி செயல்களுக்கு உடந்தையாக இருப்பதும் உண்டு. இத்தகைய அரசியல்வாதிகள் குறித்து ''திசை தெரியாத பயணங்கள்'' நாடகத்தில் ஆசிரியர் பதிவு செய்துள்ளார். பிழைப்புக்கு என்ன செய்வது என உரையாடுகின்றனர் போலி அரசியல்வாதிகளான பல்லி மற்றும் பாச்சா என்பவர்கள்.*

***பல்லி: காசு செலவில்லாம வேற என்னடா பண்றது? நீதான் சொல்லுடா!***
***பாச்சா: (யோசித்து) இருக்குடா ஒரு தொழில்! அந்தத் தொழில் பலரப் பண்ணையார் ஆக்கியிருக்கு! பலரப் பஞ்சாயத்து மெம்பர் ஆக்கியிருக்கு! நாம தொடங்கினோம்ணா. பண்ணையார் ஆகலாம்! பஞ்சாயத்து மெம்பரும் ஆகலாம்!***
***பல்லி: என்னடா அந்தத் தொழில்?***
***பாச்சா: அதுதாண்டா கள்ளச் சாராயம் காச்சிறது?[8]***

*நாட்டு மக்களுக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டிய அரசியல்வாதிகள் மக்களை அழிக்கும் போதைப் பழக்கத்திற்குத் தாங்கள் மட்டும் அடிமையாவதோடு நிற்காமல் நாட்டு மக்களையும் கெடுக்க முயல்கின்றனர்.*

*''ஆயிரம் பூக்கள் மலரட்டும்'' எனும் நாடகத்தில் மன்னன் அகஸ்வேரு தானும் மதுவிற்கு அடிமையாகி அதன் போதை தலைக்கு ஏறிய போது தனது மனைவி வஸ்தியையே பிற மன்னர்களுக்கு விருந்தாக்கத் துடிக்கிறான். மறுத்த வஸ்திக்குப் பட்டத்து அரசி எனும் உரிமை மறுக்கப்படுகிறது. இது பல்வேறு அரசியல் குழப்பங்களை ஏற்படுத்துகிறது. அனைத்திற்கும் காரணம் ஆட்சியாளரின் மதுபோதை.*

**மன்னர்: நாம் இன்பத்தின் சிகரத்தை எட்ட வேண்டிய இனிய நாள். இன்றைய விருந்தின் முதல் கட்டமாக எல்லோருக்கும் மது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நண்பர்களே இன்று நீங்கள் எப்படி வேண்டுமானாலும் அருந்துங்கள்!....வஸ்தியை வரச் சொல்! அவளது அழகு அனைவர் கண்களுக்கும் விருந்தாகட்டும்![9]**

*எனும் நாடகக் காட்சி மதுவால் விளைந்த அசிங்கமான அரசியல். ஆட்சியாளர்கள் மதுவுக்கு அடிமைப்பட்டு அறிவிழந்தால் நாடும், வீடும் பொலிவிழந்து அலங்கோலமாகி விடும் எனும் எச்சரிக்கையே இந்தக் காட்சிப்படுத்தல். ஆட்சியாளர்கள் மனத் தெளிவோடு அரியணையில் அமர்ந்திருக்க வேண்டும். அப்போது தான் நாட்டில் நல்லாட்சி மலரும்; அமைதி நிலவும் எனும் உண்மையை ஆசிரியர் இக்காட்சியின் மூலமாக இன்றைய ஆட்சியாளர்களுக்குப் புரியவைக்க முயல்கிறார்.*

**தொகுப்புரை**

*அரசியல் என்ற வார்த்தைக்குப் பல்வேறு அர்த்தங்கள் கூறப்பட்டாலும் இந்த வார்த்தை ஆளும் வர்க்கத்தினரின் ஆட்சி, அதிகாரம், ஆளுகை என்பவற்றைக் குறிக்கவே அதிகம் பயன்படுத்தப்படுகிறது. மக்களுக்கான திட்டங்கள் மக்களிடம் சரியாகச் சென்று சேர அரசியல்வாதிகள் ஒத்துழைக்க வேண்டும். ஆனால் இன்று சுரண்டல், ஊழல், போலித்தனம், ஆடம்பரம், போதைப்பழக்கம்போன்றவற்றிற்கு அரசியல்வாதிகள் அடிமைகளாக உள்ளனர். இதனால் நாட்டின் நலன் பெரிதும் பாதிக்கப்படுகிறது. நல்ல ஆட்சியாளர்களும் நல்ல ஆட்சியும் தான் ஆசிரியரின் கனவு. மக்களின் கனவும் அதுதான். தனது கனவினை ஆசிரியர் படைப்பாக்கியுள்ளார்.*

**அடிக்குறிப்புகள்**

1. *புறநானூறு, பா.எண். 186, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி)லிட்., 2004*
2. *மீரா கவிதைகள், ப.387, சீதை பதிப்பகம், சென்னை - 5, 2019*
3. *சூரியக் கனவுகள்,பக்.20 - 21,வில்லவன், 2014*
4. *புதிய பூக்கள் மலரட்டும், ப. 22*
5. *சூரியக் கனவுகள், ப.24,வில்லவன், 2014*
6. *உழைப்பின் நிறம் கறுப்பு, ப.37,வில்லவன், 2012*
7. *சூரியக் கனவுகள், ப.41 ,வில்லவன், 2014*
8. *திசை தெரியாத பயணங்கள், ப.21, வில்லவன், 2011*
9. *ஆயிரம் பூக்கள் மலரட்டும், பக். 11 - 13, வில்லவன், 2013*

## References

1. Purananooru, New Century Book House(P)Ltd., 2004.
2. Meera Kavithakal, Seethai Publications, Chennai – 5, 2019.
3. Surya Kavithaigal,  Vilavan, 2014.
4. Ulaippin Niram Karuppu, Villavan, 2012.
5. Thisai Theriyatha Payanangal, Villavan, 2011.
6. Oyiram Pookkal Malarattum, Villavan, 2013.